# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஏப்ரல் 2007 மலர் 3 இதழ் 1

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.




## மறுவாழ்வு

### சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் நிலச் சீரமைப்பு - திட்ட விவரம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் நிலங்களைச் சீரமைக்கும் பணியை "தி வெட்லேண்ட்ஸ் இன்டர்நேஷனல் சவுத் ஏஷியா" என்ற நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகள் பின்வருமாறு,



*வீட்டின் கொல்லைபுறத்திலுள்ள மண்புழு உரப்படுக்கைக்குத் தண்ணீர் தெளிக்கும் பெண் பயனீட்டாளர். மண்புழு உரம் ஒரு சிறந்த இயற்கை உரமாகும்.*

- நாகப்பட்டினம் மற்றும் பாண்டிசேரி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 413 விவசாயிகளுக்கு இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், 14 தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 26 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.
- சித்திவிநாயகபுரம் கிராமத்தில் சுமார் 45 ஏக்கரில் இயற்கைவழி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- கூழையார் கிராமத்தில் சுமார் 10 ஏக்கரில் இயற்கைவழி நிலக்கடலைச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- சித்திவிநாயகபுரம் கிராமத்தில் உள்ள 40 பெண் விவசாயிகளின் வீடுகளில் வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்பட்டன.
- மண் மற்றும் தண்ணீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப் பட்டன.
- மூன்று கிராமங்களிலுள்ள ஒன்பது பண்ணைக் குட்டைகள் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டன.
- சித்திவிநாயகபுரம் கிராமத்தில் சமுதாய தாவரக் கரைசல் தயாரிப்பகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.
- பதினைந்து மண்புழு உரத்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.
- "உதயநிலா" என்ற இயற்கை விவசாயிகள் சங்கம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
- பத்து ஏக்கரில் முந்திரி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- சித்திவிநாயகபுரம் கிராமத்தில் மாதிரி நெல் வயல் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

### சீரமைப்பு பணிகளைப் பற்றிய புதிய வெளியீடு



*"சுனாமியும் விவசாயிகளின் மறுவாழ்வும்"* என்ற இந்தப் புத்தகத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையமும், பல்வேறு தொண்டு நிறுவனங்களும் மேற்கொண்ட நிவாரணப் பணிகளின் விவரங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேலும், நிவாரணப் பணியில் ஈடுபட்ட தொண்டு நிறுவனங்களைப் பற்றிய விவரங்கள், சி.ஐ.கே.எஸ். மேற்கொண்ட பரிசோதனைகள், உவர் நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்ற பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் அவற்றின் சிறப்பம்சங்கள், இயற்கை அரண்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

---

## வடகிழக்கிலிருந்து வந்த நண்பர்கள்

ஃபெர்டைல் கிரவுண்ட்ஸ் (Fertile Grounds) என்ற தொண்டு நிறுவனம் கனடாவைத் தலைமையிடமாகக் கொண்டு அஸ்ஸாமில் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. பெக்கி கார்ஸ்வெல் அவர்களும், ஏழு பேர் அடங்கிய குழுவும் பிப்ரவரி 26 - மார்ச் 2ஆம் தேதிகளில் நமது மையத்திற்கு வந்திருந்தனர். இந்தக் குழுவினர் நமது திட்டங்கள் செயல்படுத்தப்படும் கிராமங்கள், சுக்கன்கொல்லையிலுள்ள ஆராய்ச்சிப் பண்ணை, செங்கல்பட்டிலுள்ள உயிர் உரத்தயாரிப்பகம் மற்றும் தண்டரையிலுள்ள மூலிகைத் தோட்டம் போன்றவைகளைப் பார்வையிட்டனர். மேலும், நமது ஆராய்ச்சிப் பண்ணையில், மண்புழு உரத் தயாரிப்பகம், தாவரக் கரைசல் தயாரிப்பகம், மாதிரி மூலிகை மற்றும் காய்கறித் தோட்டங்களைச் சுற்றிப் பார்த்தனர். "மக்கு உரத்தயாரிப்பு" என்னும் வீடியோ படம் இவர்களுக்காகத் திரையிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, மார்ச் 2ஆம் தேதியன்று, டாக்டர். கே. விஜயலட்சுமி அவர்களைச் சந்தித்து நமது மையத்துடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடினர்.






# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

## விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள 19 கிராமங்களிலிருந்து 323.56 ஏக்கர் நிலம் இயற்கைவழி வேளாண்மைக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சுமார் 199,36 ஏக்கரில் இயற்கைவழி வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜனவரி 6ஆம் தேதியன்று, ஃபோர்ட் நிறுவனத்தின் திட்ட அலுவலர் டாக்டர் வசந்த் சபர்வால் அவர்கள் நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார். மேலும், திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைப் பார்வையிட்டார். இதை தொடர்ந்து, ஜனவரி 7ஆம் தேதியன்று, இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள நமது பணியாளர்களுடன் கலந்துரையாடினார். திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டப் பயனீட்டாளர்கள் பிப்ரவரி 12, 14 மற்றும் 20ஆம் தேதிகளில், சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கும், கொளத்தாஞ்சேரி, கலியப்பேட்டை, சித்திரவாடி மற்றும் ஈசூர் கிராமங்களிலுள்ள இயற்கை வேளாண் வயல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கான விற்பனை மையம் ஒன்றை அமைப்பதற்காக சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கத்திற்குச் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. நான்கு மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்கள் அகமதிப்பீடு செய்யப்பட்டன. மார்ச் 14ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களும், சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்களும், சுக்கன்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கும், சித்திரவாடியிலுள்ள இயற்கை வேளாண் வயல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். செங்கல்பட்டு இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் சங்கம் ஏப்ரல் 2ஆம் தேதியன்று, பதிவுச் செய்யப்பட்டது.

## உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை திட்டம்

புது தில்லியிலுள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பத்து கிராமங்களிலும் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கூட்டங்களில் மூலிகைகளின் பயன்கள் மற்றும் விநியோகம், ஆரோக்கியம் திட்டத்திற்கான நெல் கொள்முதல், தாவரக் கரைசல் தயாரிப்பகத்தின் செயல்பாடுகள், முதலுதவி பயிற்சி, இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கான விற்பனை மையம், இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் மற்றும் காய்கறி விதைகளின் உற்பத்தி பற்றி விவாதிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு நெல் மற்றும் காய்கறி விதைகள், மூலிகை நாற்றுகள் மற்றும் இயற்கை வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. விவசாயிகளிடமிருந்து சுமார் 16 டன் பாரம்பரிய நெல் ரகங்கள் பெறப்பட்டன. நெல் மற்றும் நிலக்கடலை முறையே 50 மற்றும் 56 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன. எடையூர், வளத்தோடு, நரப்பாக்கம் மற்றும் சித்தாலமங்கலம் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 13 விவசாயிகள் நெல் மற்றும் காய்கறி விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், எடையூர் மற்றும் வளத்தோடு கிராமங்களைச் சேர்ந்த மூன்று விவசாயிகள் 18 பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி, கலியப்பேட்டை மற்றும் ஈசூர் கிராமங்களைச் சேர்ந்த 43 விவசாயிகள் சுமார் 8.10 ஏக்கரில் இயற்கைவழி சாகுபடியை மேற்கொண்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு பருத்தி, ஆமணக்கு மற்றும் சோள விதைகள், கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு, ஒட்டுப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறி, *அசோஸ்பைரில்லம், ரைசோபியம்* மற்றும் *பாஸ்போபாக்டீரியம்* போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டன. கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராம விவசாயிகளிடமிருந்து சுமார் 2030 கிலோ நெல் பெறப்பட்டது. ஜனவரி 11ஆம் தேதியன்று, ஹீவாஸ் நிறுவனத்தின் திட்ட அலுவலர் திரு. பிஷ்வதீப் கோஷ் அவர்கள் நமது ஆய்வுப் பண்ணையையும், திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களையும் பார்வையிட்டார். ஜனவரி 18ஆம் தேதியன்று, கலியப்பேட்டை கிராமப் பயனீட்டாளர்களுக்கு "இயற்கைவழி காய்கறிச் சாகுபடி" என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி, கலியப்பேட்டை மற்றும் ஈசூர் கிராமப் பயனீட்டாளர்கள் ஜனவரி 24 மற்றும் 26ஆம் தேதிகளில், புளியங்குடியிலுள்ள இயற்கைவழி வேளாண் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிப்ரவரி 17 மற்றும் 24ஆம் தேதிகளில், கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப் பேட்டை கிராமப் பயனீட்டாளர்களுக்கு இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் இயற்கைவழி பூச்சிக்கட்டுப்பாடு, அகக்கட்டுப்பாட்டு முறைமைகள், மண்வளப் பாதுகாப்பு மற்றும் தாவரக் கரைசல் தயாரிப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. கலியப்பேட்டை மற்றும் சித்திரவாடி கிராமங்களில் கட்டப்பட்டுள்ள விதை வங்கிகள் ஜனவரி 17 மற்றும் 24ஆம் தேதிகளில் திறந்து வைக்கப்பட்டன. கொளத்தாஞ்சேரி கிராமத்தில் விதை வங்கி கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

## காய்கறிகளில் விருட்சாயுர்வேதப் பரிசோதனை

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வெண்டையில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் அகணியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கத்தரியில் *வசம்பு* பொடியைப் பயன்படுத்தி புகைமூட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 27ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் திரு. செல்வமுத்துகுமரன் அவர்கள் "பூச்சி, நோய் தாக்குதல் குறித்த தகவல் சேகரிப்பு முறைகள்" என்ற தலைப்பில் சீர்காழி களப்பணி அலுவலகப் பணியாளர்களுக்குப் பயிற்சி ஒன்றை நடத்தினார். பிப்ரவரி 28 மற்றும் மார்ச் 16ஆம் தேதிகளில், ஆதமங்களம், கண்டமங்கலம் அகணி மற்றும் பாகசாலை கிராமப் பயனீட்டாளர்களுக்கு "இயற்கைவழி காய்கறிச் சாகுபடி" என்ற தலைப்பில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. அகணி, ஆதமங்களம், ஆலங்காடு, அல்லிவிளாகம் மற்றும் நல்லவிநாயகபுரம் கிராமங்களைச் சேர்ந்த 15 விவசாயிகள், சுமார் 195 சென்டில் இயற்கைவழி காய்கறிச் சாகுபடியை மேற்கொண்டுள்ளனர். பாகசாலை கிராமத்தில் இயற்கை விவசாயிகள் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்திற்குக் கைத்தெளிப்பான் ஒன்றும், காய்கறி விதைகளும் வழங்கப்பட்டன.

## தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. ஆய்வகத்தில் வளர்க்கப்படும் அசுவுணிகள் 76வது தலைமுறையிலும், படைப்புழுக்கள் 4வது ஆய்வகத் தலைமுறையிலும் உள்ளன. படைப்புழுக்களில் ஆமணக்கு, கண்டங்கத்தரி, மிளகாய் மற்றும் ரயில் பூண்டு கரைசல்களைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது பரிசோதனைகளின் அடிப்படையில் தாவரக் கரைசல்களின் செயல்படும் முறைகள் குறித்து அறிக்கை ஒன்று எழுதி முடிக்கப்பட்டுள்ளது. புள்ளி வண்டுகள் கத்தரிச் செடிகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. அல்லிவிளாகம் கிராமத்தில் ஆய்விற்காக 33 சென்டில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

### தொழில்நுட்ப ஆதார மைய்யத்தின் செயல்பாடுகள்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையம் (Technology Resource Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கைவழி வேளாண்மை தொழில்நுட்பங்கள் திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 20 விவசாயிகள் மண்புழு உரத் தயாரிப்பு, மக்கு உரத் தயாரிப்பு, தாவரக் கரைசல்கள் தயாரிப்பு மற்றும் அசோலா, சணப்பை மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடி, இயற்கைவழி காய்கறி மற்றும் பாரம்பரிய நெல் சாகுபடி, கோழி வளர்ப்பு, மாதிரி மூலிகை மற்றும் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சி மையத்தின் முதல்பாகக் கட்டுமானப் பணி முடிவடைந்து விட்டது.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் வி.ஆர்.ஐ.-2 (VRI-2) நிலக்கடலை ரகம் ஒரு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒன்பது பாரம்பரிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இந்தப் பாரம்பரிய நெல் ரகங்களில் ஏற்பட்ட இலைப்புள்ளி நோய் தாக்குதல், கோமியம் மற்றும் மோர் கரைசல் மற்றும் பஞ்சகவ்யம் தெளித்துக் கட்டுப்படுத்தப்பட்டது. நிழல்வலைக் கூடத்தில், சுமார் ஒரு சென்டில் முட்டைகோஸ் மற்றும் காளிபிளவர் பயிரிடப்பட்டுள்ளன. முட்டைகோஸ் மற்றும் காளிபிளவரில் ஏற்பட்ட வைரமுதுகு அந்துப்பூச்சி மற்றும் புகையிலைப் புழுவின் தாக்குதல்கள் முறையே *சிறியாநங்கை* கரைசல் மற்றும் *பஞ்சதிக்த கஷாயம்* தெளித்து கட்டுப்படுத்தப்பட்டன. தக்காளியில் காய்துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 50 சென்டில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், தக்காளியில் *வசம்பு* மற்றும் *வாய்விடங்கம்* பொடியைப் பயன்படுத்தி புகைமூட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### திருச்சியில் நடைபெற்ற கூட்டம்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, "தற்சார்பு முறையில் மூலிகைத் தாவரங்களை உபயோகித்து பயனடைதல்" என்ற திட்டத்தை ஏழு மாநிலங்களிலுள்ள சுமார் 13 நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகளை அகமதிப்பீடு செய்வதற்காக, ஜனவரி 10 மற்றும் 11ஆம் தேதிகளில், திருச்சியில் இரண்டு நாள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் திருச்சியிலுள்ள லீட் (LEAD) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அழைப்பின்பேரில் நமது மையத்திலிருந்து ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

### மூலிகைத் தாவரங்கள் பற்றிய கருத்தரங்கு

ஜனவரி 18ஆம் தேதியன்று, மூலிகைத் தாவரங்களைப் பற்றிய கருத்தரங்கு எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் நடத்தப்பட்டது. நமது மையத்திலிருந்து ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டார். இந்தக் கருத்தரங்கில், சென்னையிலுள்ள எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், கேரளாவிலுள்ள ஆரிய வைத்திய சாலை மற்றும் பெங்களூரிலுள்ள ஐ.எஸ்.ஆர்.ஓ. வை (ISRO) சேர்ந்த விஞ்ஞானிகள் மூன்று குழுவாகப் பிரிந்து மூலிகைத் தாவரங்களைப் பற்றி விவாதித்தனர்.

### விஞ்ஞானிகள் வருகை

புதுதில்லியில் உள்ள தேசிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையத்தின் (National Centre for Integrated Pest Management) இயக்குனர் டாக்டர் அமெரிக்கா சிங் அவர்களும், விஞ்ஞானி டாக்டர் ஓ.பி. ஷர்மா அவர்களும் ஜனவரி 23ஆம் தேதியன்று, நமது மையத்திற்கு வந்திருந்தனர். இவர்களுக்கு நமது மையத்தின் செயல்பாடுகள் பற்றியும், பயிர் பாதுகாப்பில் நாம் மேற்கொண்டுள்ள பணிகள் பற்றியும் விளக்கி கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து, டாக்டர். அமெரிக்கா சிங் அவர்கள் அவரது மையத்தின் (NCIPM) செயல் திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து உரையாற்றினார். ஜனவரி 24ஆம் தேதியன்று, இவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நமது ஆராய்ச்சிப் பண்ணைக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளைப் பற்றி கேட்டறிந்தனர்.

### எம்.சி.ஆர்.சி.யில் நடைபெற்ற கூட்டம்

பிப்ரவரி 8ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ஏ.எம்.எம். முருகப்ப செட்டியார் ஆராய்ச்சி மையத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டம் வருங்காலத்தில் மையத்தில் செய்யவிருக்கும் பணிகளைத் திட்டமிடுவதற்காகவும், அதைக் குறித்து ஒரு சில நலம் விரும்பிகளின் கருத்துக்களைப் பெறுவதற்காகவும் நடத்தப்பட்டது. இந்த மையத்தின் தலைவர் திரு. எம்.வி. முருகப்பன் அவர்களின் அழைப்பின் பேரில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். மேலும், இந்தக் கூட்டத்தில் மதுரையிலுள்ள சி.சி.டி. (CCD) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. முத்து அவர்களும், புளியங்குடியிலுள்ள விவசாயி சேவா சங்கத்தைச் சேர்ந்த திரு. அந்தோணிசாமி அவர்களும், மெட்ராஸ் நேச்சுரலிஸ்ட் சொசைடியைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணா அவர்களும் கலந்து கொண்டனர்.

### காம்பாஸ் உறுப்பினர்கள் கூட்டம்

காம்பாஸ் திட்டத்தின் ஆசிய உறுப்பினர்கள் கூட்டம் ஸ்ரீலங்காவிலுள்ள தொலங்கமுவா என்ற இடத்தில், பிப்ரவரி 12 முதல் 16ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகள் அகமதிப்பீடு செய்யப்பட்டன. மேலும், 2007ஆம் ஆண்டில் செயல்படுத்தவிருக்கும் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில், காம்பாஸ் திட்டத்தின் தற்போதைய உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா, வியட்நாம் மற்றும் ஜப்பான் நாடுகளிலிருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வருங்கால உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேலும், இந்தக் கூட்டத்தில் திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு. விம் எய்ம்ஸ்டிரா அவர்களும், காம்பாஸ் நெதர்லாந்தைச் சேர்ந்த திரு. கிளேயர் அவர்களும் மற்றும் போர்ச்சுக்கலைச் சேர்ந்த திரு. மார்க் லெம்மெரிங் அவர்களும் கலந்து கொண்டனர்.

### லீட் (LEAD) நிறுவனத்தினரின் வருகை

பிப்ரவரி 23ஆம் தேதியன்று, திருச்சியிலுள்ள லீட் (LEAD) நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர் திருமதி. ராதா அவர்களும், நிறுவனத்தின் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள சுமார் பத்து நபர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர். அவர்கள் மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகளைப் பற்றி கலந்துரையாடினர். பின்பு சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்குச் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டனர். இதன் தொடர்ச்சியாக, பிப்ரவரி 24ஆம் தேதியன்று, திருமதி ராதா அவர்கள் அவர்களுடைய நிறுவனம் நமது மையத்துடன் இணைந்து செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் மற்றும் அதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடுவதற்காக வந்திருந்தார்.

உங்கள் கருத்துக்கள்
மற்றும் விமர்சனங்களை
info@ciks.org என்ற
மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

### இயற்கை சாகுபடி தொழில்நுட்பங்கள்

### தக்காளி, வெண்டை, நிலக்கடலை




இந்தப் புத்தகங்களில் தக்காளி, வெண்டை மற்றும் நிலக்கடலை போன்றவைகளுக்கான இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. நிலத்தேர்வு முதல் அறுவடை வரை விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதமான தகவல்களும் இந்தப் புத்தகத்தில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், பூச்சி மற்றும் நோய் பாதிப்பை எதிர்கொள்ள பயன்படுத்தப்படும் கரைசல்களின் தயாரிப்பு மற்றும் பயன்பாட்டு முறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

**விலை : ரூ. 25/- (ஒன்று)**

இந்தப் புத்தகங்களைப் பெற விரும்புவோர் புத்தகத்தின் விலையுடன் 30% தபால் செலவையும் சேர்த்து சென்னையில் மாற்றத்தக்க பணவிடை (M.O.) அல்லது வரைவோலையை (D.D.) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (Centre for Indian Knowledge Systems) என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும். புத்தகத்தின் பெயர் மற்றும் தேவைப்படும் எண்ணிக்கையைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

## வருகையாளர் பதிவேடு

- ஜனவரி 8ஆம் தேதியன்று, ஆஸ்திரேலியாவிலுள்ள சார்லஸ் ஸ்டார்ட் பல்கலைக்கழகத்தின் வேளாண் சூழ்நிலையியல் திட்டத்தின் பயிற்சி இயக்குனர் டாக்டர் கெர்ரி கோக்ரெய்ன் அவர்கள் வந்திருந்தார்.
- ஜனவரி 18ஆம் தேதியன்று, ஹைதராபாத்திலுள்ள என்.ஐ.ஆர்.டி. நிறுவனத்திலிருந்து டாக்டர் வி. அண்ணாமலை அவர்கள் நமது ஆய்வுப் பண்ணை மற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைப் பார்வையிடுவதற்காக வந்திருந்தார்.
- ஜனவரி 23ஆம் தேதியன்று, காந்திகிராம் பல்கலைக்கழகத்தின், வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறையின் பேராசிரியர் டாக்டர் டி.டி. ரங்கநாதன் அவர்கள் வந்திருந்தார்.
- ஜனவரி 25ஆம் தேதியன்று, டாப்கார்ன் (TAFCORN) தமிழ்நாடு காடு வளர்ப்பு கழகத்தின் நிர்வாகி திரு. ஏ.எஸ். பாலநாதன், ஐ.எப்.சி. அவர்கள் வந்திருந்தார்.
- ஜனவரி 31ஆம் தேதியன்று, ஐ.ஐ.டி. சென்னையிலுள்ள ரூடாக் (RUTAG - Rural Development Action Group) அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் எம். ரவீந்திரன் அவர்கள் வந்திருந்தார்.
- பிப்ரவரி 15ஆம் தேதியன்று, கிரெய்ன் இந்தியா (Grain India) நிறுவனத்திலிருந்து செல்வி. ஷாலினி பூட்டானி அவர்கள் வந்திருந்தார்.
- மார்ச் 16ஆம் தேதியன்று, நமது மையத்தின் அறங்காவலர்களில் ஒருவரான திரு. தர்ஷன் ஷங்கர் அவர்கள் வந்திருந்தார்.
- மார்ச் 17ஆம் தேதியன்று, திருமதி. மேனகா தேசிகாசார் அவர்கள் சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார்.
- மார்ச் 17ஆம் தேதியன்று, செங்கல்பட்டிலுள்ள வேளாண் துணை இயக்குனர் அலுவலகத்திலிருந்து 17 பேர் ஒரு குழுவாக சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- மார்ச் 24ஆம் தேதியன்று, மெல்ரோசாபுரத்திலுள்ள சி.எஸ்.ஐ. ஈவார்ட்ஸ் பெண்கள் கிறித்துவக் கல்லூரியிலிருந்து 90 மாணவிகள் ஒரு குழுவாக நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114

மின்னஞ்சல் : info@ciks.org இணையத்தளம் : www.ciks.org